**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,**
**ARIYALUR**

| P.W.– 1 மனோன்மணி | MCOP No. 9/2024 | 28.01.2026. |
| --- | --- | --- |

(சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**முதல் விசாரணை தொடர்ச்சி**

விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் ஒளிநகல் ம.சா.ஆ.1. எனது புறநோயாளி பிரிவு சீட்டு ம.சா.ஆ.2. எனது Discharge summary ஒளிநகல் ம.சா.ஆ.3. எனது சிகிச்சை விவரங்கள் அடங்கிய நோட்டு ஒளிநகல் ம.சா.ஆ.4. (மேற்படி ஆவணம் இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்டது அல்ல என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு மேற்படி ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) மருத்துவரின் மருந்து பரிந்துரை சீட்டுகள் ம.சா.ஆ.5.(மேற்படி ஆவணம் இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்டது அல்ல என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு மேற்படி ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) மருத்துவ பில்கள் ம.சா.ஆ.6.(மேற்படி ஆவணம் இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்டது அல்ல என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு மேற்படி ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). எனது ஆதார் அட்டையின் ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.7. எனது வங்கிக்கணக்கு புத்தகத்தின் ஒளிநகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.8. எனவே, மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

நான் விபத்தன்று அந்தபேருந்தில் பயணம் செய்தேன் என்பதை காட்ட பேருந்து பயணச்சீட்டு எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் பேருந்தில் 60, 70 நபர்கள் பயணித்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் பேருந்தின் முன்பக்க படிக்கட்டின் அருகில் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல, முன்பக்க படிக்கட்டின் அருகில் உள்ள சீட்டில் அமர்ந்திருந்தேன். எனது அருகே சுமார் 5 நபர்கள் நின்று கொண்டு

நீதிபதியின் சுருக்கொப்பம்

பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். பேருந்தின் குறுக்கே ஒரு இருச்சக்கரவாகனம் திடீரென வந்ததால் பேருந்தின் ஓட்டுநர் பிரேக் அடித்தார் என்றால் சரிதான். அப்போது நான் சரியாக உட்காரராததால் தான் கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல. பேருந்திலிருந்து வேறு யாரும் கீழே விழவில்லை என்றால் சரிதான். விபத்தன்று நான் படிக்கட்டில் பயணம் செய்ததால் தான் கீழே விழுந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு வேலை எதுவும் கிடையாது. எனது மகன் விவசாய வேலை செய்கிறார். எனது காயங்களுக்கு நான் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துள்ளேன். எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்றும், அவை முற்றிலும் குணமாகிவிட்டன என்றால் சரியல்ல. எனக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4 முதல் 6 ஆவணங்கள் கூடுதல் இழப்பீடு பெறுவதற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

சாட்சியின் கையொப்பம்:sd/–மனோன்மணி

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

INBAKARTHICK

Digitally signed by INBAKARTHICK
Date: 2026.01.28 16:46:51 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அரியலூர்.

நீதிபதியின் சுருக்கொப்பம்